## சுருக்கம்

சிறுபான்மையினர் நலன் – 2018–2019–ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவித்தபடி பணிக்கு செல்லும் முஸ்லிம் பெண்களுக்கான விடுதியை தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்குச் சொந்தமான இடத்தைத் தேர்வு செய்து கட்டடம் கட்டும் வரையில் சென்னை இராயப்பேட்டையில் தனியார் வாடகை கட்டடத்தில் துவங்க நிர்வாக அனுமதி வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (எஸ்2)த் துறை**

அரசாணை (ப) எண். 49

நாள் 14.08.2019
விகாரி, ஆடி 29
திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்கப்பட்டது :–

1. அரசு கடித எண்.1479/எஸ்2/2018–1, நாள் 19.03.2018.
2. தமிழ்நாடு வக்ஃப் வாரிய முதன்மை செயல் அலுவலரின் கடித ந.க.எண்.3274/2018/இ1, நாள் 05.04.2019 மற்றும் 19.06.2019.
3. சிறுபான்மையினர் நல ஆணையரின் கடித ந.க.எண்.பி4/2980/2018, நாள் 01.03.2019 மற்றும் 24.06.2019.

******

**ஆணை:-**

2018–2019–ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்பட்டது :-

> “சென்னை மாவட்டத்தில் வக்ஃபு வாரியத்திற்கு சொந்தமான நிலத்தில் வேலைக்கு செல்லும் இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்த பெண்கள் தங்குவதற்காக மகளிர் விடுதி ஒன்று அரசு நிதி உதவியுடன் வரும் நிதியாண்டில் கட்டப்படும்”.

அதன்படி, மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில், பணிக்கு செல்லும் முஸ்லிம் பெண்களுக்கு விடுதி கட்டுவதற்கு உரிய இடம் தேர்வு செய்து அரசிற்கு அறிக்கை அனுப்புமாறு தமிழ்நாடு வக்ஃபு வாரிய முதன்மை செயல் அலுவலரிடம் கோரப்பட்டது. மேற்படி விடுதி கட்டடம் கட்டுவதற்கான வக்ஃபு வாரிய இடத்தை தேர்வு செய்வதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாடு வக்ஃபு வாரியம் எடுத்து வருகிறது.

2. இதற்கிடையில், மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், பழைய எண்.2, புதிய எண்.5, நீதியரசர் ஜம்புலிங்கம் தெரு, இராயப்பேட்டை, சென்னை–14ல் அமைந்துள்ள திரு அபூபக்கர் மற்றும் பங்குதாரர்களுக்கு சொந்தமான (தரைத் தளம் 6 கழிவறைகள், முதல் தளம் 1500 சதுர அடி மற்றும் இரண்டாம் தளத்தில் 1500 சதுர அடி) மொத்தம் 4500 சதுரடி கொண்ட கட்டடத்தை பணிக்கு செல்லும் முஸ்லிம் பெண்களுக்கு விடுதி நடத்த பொதுப்பணித் துறை நிர்ணயம் செய்யும் வாடகைக்கு விட கட்டட உரிமையாளர் சம்மதம் தெரிவித்துள்ளதாக தெரிவித்து, அக்கட்டிடத்தில் பணிக்குச் செல்லும் முஸ்லிம் பெண்களுக்கான விடுதியை அமைக்கலாம் என்று தமிழ்நாடு வக்ஃப் வாரிய முதன்மை செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், பணிக்கு செல்லும் முஸ்லிம் பெண்களுக்கு விடுதி கட்டுவதற்கு உரிய இடம் தமிழ்நாடு வக்ஃப் வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்டு வருகிறது என்றும், திரு அபூபக்கர் மற்றும் பங்குதாரர்களுக்கு சொந்தமான பழைய எண்.2, புதிய எண்.5, நீதியரசர் ஜம்புலிங்கம் தெரு, இராயப்பேட்டை, சென்னை – 14–ல் அமைந்துள்ள (முதல் தளம் 1500 சதுர அடி, இரண்டாம் தளத்தில் 1500 சதுர அடி) 4500 சதுரடி கொண்ட தனியார் கட்டடத்தில் பணிக்கு செல்லும் முஸ்லிம் பெண்கள் தங்குவதற்கான விடுதி நடத்தவும், அக்கட்டடத்திற்கு பொதுப் பணித் துறை நிர்ணயம் செய்யும் வாடகையின் அடிப்படையில், பணிக்குச் செல்லும் முஸ்லிம் பெண்களுக்கு விடுதி அமைக்கவும் கட்டட உரிமையாளர் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும், மேற்படி கட்டடத்தில் 50 முஸ்லிம் மகளிர் தங்கும் வகையில் உட்கட்டமைப்பு செய்யவும், தற்போது கட்டடத்தில் உள்ள பழுதுகளை சரிபார்த்து தருமாறு கட்டடத்தின் உரிமையாளரை தனியே அறிவுறுத்தியுள்ளதாகவும் சிறுபான்மையினர் நல ஆணையர் தெரிவித்துள்ளார்.

4. மேலும், மேற்படி இடத்தில், பொதுப் பணித் துறை நிர்ணயம் செய்யும் வாடகையின் அடிப்படையில், தனியார் வாடகை கட்டடத்தில் விடுதி துவங்க அரசின் நிர்வாக அனுமதி வழங்குமாறும், மேலும், விடுதி துவங்குவதற்கு தொடர் மற்றும் தொடரா செலவினங்களின் நிதி தேவை குறித்து தனியே கருத்துரு அனுப்பப்படும் எனவும் சிறுபான்மையினர் நல ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. சிறுபான்மையினர் நலத்துறை ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, 2018–2019–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு செய்தபடி, பணிக்குச் செல்லும் முஸ்லிம் பெண்களுக்கான விடுதியை தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு சொந்தமான இடத்தை தேர்வு செய்து கட்டடம் கட்டும் வரையில் இராயப்பேட்டை, பழைய எண்.2, புதிய எண்.5, நீதியரசர் ஜம்புலிங்கம் தெரு, சென்னையிலுள்ள 4500 சதுர அடி கொண்ட, திரு அபூபக்கர் மற்றும் பங்குதாரர்களுக்குச் சொந்தமான தனியார் வாடகை கட்டடத்தில் பணிக்குச் செல்லும் முஸ்லிம் பெண்களுக்கான விடுதியை துவங்க நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.எண்.39802/பி.மி.பி(ம)சி.ந/2019, நாள் 09.08.2019–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ஆ.கார்த்திக்
அரசுச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், சிறுபான்மையினர் நல ஆணையரகம், சென்னை–5.
முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு வக்ஃபு வாரியம், சென்னை – 1.
ஆணையர், மாநில சிறுபான்மையினர் ஆணையம், சென்னை–2.
மாநில கணக்காயர், (A&E), தணிக்கை I & II, சென்னை – 9/18.
சம்பளம் (ம) கணக்கு அலுவலர், சென்னை – 9.

<u>நகல் :-</u>

முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் தொழிலாளர் நலன் (ம) வக்ஃபு அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நல அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நலத்துறை
செயலரின் முதுநிலை தனிச் செயலர், சென்னை – 9.
நிதி (வரவு–செலவு/பொது I,II/பி.மி.பி) துறை, சென்னை – 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நலத் (பிந3)த் துறை,
சென்னை – 9.
இருப்புக் கோப்பு/உபரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
14/08/19